31st March 1969]

Bus tickets

* 331 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether bus tickets were not issued by the Transport Department at Kulithurai of Kanyakumari district in November 1968 ;

(*b*) whether the Transport Department and the public experienced any hardship due to this ; and

(*c*) the reason for non-distribution of tickets to the Department ?

பயணச்சீட்டு இல்லாமை.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1968 நவம்பரில் கன்யாகுமரி மாவட்ட குழித்துறையில் போக்குவரத்து இலாகாவில் பஸ் டிக்கட் வழங்கப்படவில்லையா ?

(இ) இதனால் போக்குவரத்து துறையினரும், பொது மக்களும் அவதிப்பட்டனரா ?

(உ) பஸ் டிக்கட் அவர்களுக்கு அனுப்பாத காரணம் யாது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) and (உ) தமிழக அரசு அச்சகம் தமிழ்நாடு போக்குவரத்துத் துறையில் பயணச் சீட்டுத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாமல் போன காரணத்தால் 3—11—1968-க்கும் 8—11—1968-க்கும் இடைப் பட்ட காலத்தில் இத்துறையின் கன்னியாகுமரிக் கிளைக்கு ஒருவகைப் பயணச் சீட்டு (One denomination) அனுப்புவது தேவையை விடக் குறைவாகவே இருந்தது.

(இ) இல்லை.

*332 *Q.*—

THE HON. THIRU SI. PA. ADITANAR : Sir, I request the Hon. Chairman to postpone this question (Q. 332) for answer. The reason is that there are allegations of criminal breach of trust, forged documents, falsification of accounts, criminal conspiracy, etc. I must go deep into this matter and get at the culprits.

MR. CHAIRMAN : The question is postponed.

Temple contributions to Government.

* 333 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the total acccumulations of the 5 per cent and 7 per cent contribution collected from the temple by the Hindu Religious and Charitable Endowment (Adiministration) Department?

சமய நிறுவனங்களிலிருந்து அரசுக்குக் கிடைத்த பணம்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இந்து சமய அறக் கட்டளை ஆட்சித்துறை கோவில்களிடமிருந்து வாங்கிய 5 சதம் 7 சதம் பணம் எவ்வளவு சேர்ந்துள்ளது ?